தினமலர்
கோயம்புத்தூர் | வியாழன் | 7.12.2023

# இன்ஜி., கல்லூரிகளில் பி.பி.ஏ., பி.சி.ஏ., படிப்பு திரும்ப பெற ஏ.ஐ.சி.டி.இ., தலைவருக்கு கடிதம்

**கோவை, டிச. 7–**

தொழில்நுட்பம் சாராத படிப்புகளை, ஏ.ஐ.சி.டி.இ., கட்டுப்பாட்டில் கொண்டு செல்லுதல் மற்றும் பொறியியல் கல்லூரிகளில், இப்படிப்புகளை துவக்கும் முடிவை திரும்ப பெற வலியுறுத்தி, தமிழ்நாடு சுயநிதி கலை அறிவியல் மேலாண்மை கல்லூரிகள் நலச்சங்கம் சார்பில், தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இத்தீர்மானம் குறித்த விரிவான அறிக்கை, அகில இந்திய தொழில்நுட்ப கல்விக்கவுன்சிலிடம் (ஏ.ஐ.சி.டி.இ.,) சங்கம் சார்பில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

உயர்கல்வித்துறையில், கலை அறிவியல் சார்ந்த கல்வி நிறுவனங்களை யு.ஜி.சி., எனப்படும் பல்கலை மானியக்குழுவும், பொறியியல் தொழில்நுட்ப கல்வி நிறுவனங்களை ஏ.ஐ.சி.டி.இ., எனப்படும், அகில இந்திய தொழில்நுட்ப கல்விக்கவுன்சில் அமைப்பும் கட்டுப்படுத்துகிறது.

இந்நிலையில், தொழில்நுட்பம் சாராத பி.பி.ஏ., பி.சி.ஏ., ஆகிய படிப்புகளை பொறியியல், தொழில்நுட்ப கல்லூரிகளில் துவங்கவுள்ளதாகவும், இப்படிப்புகளை நடத்தும் கலை அறிவியல் கல்லூரிகள், ஏ.ஐ.சி.டி.இ., அனுமதி பெற வேண்டும் எனவும், புதிய அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

இந்த அறிவிப்பால், கலை அறிவியல் கல்லூரிகளுக்கு பல்வேறு நடைமுறை சிக்கல்கள், நெருக்கடிகள் எழுந்துள்ளன. தவிர, பி.பி.ஏ., பி.சி.ஏ., படிப்புகளுக்கான கட்டணம் கணிசமாக உயர்வதுடன், பிற படிப்புகளில் மாணவர்களின் சேர்க்கை முற்றிலும் சரியும் வாய்ப்பும் எழுந்துள்ளது.

தொழில்நுட்ப கல்லூரிகளில், இப்பாடப்பிரிவுகளில் எத்தனை மாணவர்களை வேண்டுமானாலும் சேர்க்கலாம் என்ற அறிவிப்பு, கல்வியாளர்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இதுகுறித்த, தனியார் சுயநிதி கல்லூரி நிர்வாகிகள், முதல்வர்கள் பங்கேற்ற ஆலோசனை கூட்டம் கடந்த, நவ., 30ம் தேதி கோவையில் நடந்தது.

இக்கூட்டத்தில், ஏ.ஐ.சி.டி.இ., புதிய அறிவிப்பு மற்றும் வரைவு கையேட்டை திரும்ப பெறவேண்டும் என்றும், தொழில்நுட்பம் சாராத படிப்புகளை, பொறியியல் கல்லூரிகளில் துவங்க அனுமதிக்கக் கூடாது என்றும், தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இத்தீர்மானம் சார்ந்த விரிவான அறிக்கை, சங்கம் தரப்பில் ஏ.ஐ.சி.டி.இ., தலைவர் மற்றும் உறுப்பினர் செயலருக்கு அனுப்பப்பட்டுள்ளதாக, தமிழ்நாடு சுயநிதி கலை அறிவியல் மேலாண்மை கல்லூரிகள் நலச்சங்க தலைவர் அஜீத் குமார் லால் மோகன் மற்றும் நிர்வாகிகள் தெரிவித்தனர்.